


17. 08. 2026

## தலைப்புச் செய்திகள்

- நாட்டில் மாணாக்கர் கல்வி கற்பதற்கான மிக வலுவான கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக குடியரசு துணைத் தலைவர் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன் பெருமிதம் வெளியிட்டுள்ளார்.
- தமிழகத்தில் 75 ஆயிரம் ரூபாய் வரை பயிர்கடன் பெற்ற விவசாயிகளுக்கு கடன் முழுமையாக தள்ளுபடி செய்யப்படுவதாக முதலமைச்சர் திரு. விஜய் சட்டப்பேரவையில் இன்று அறிவித்துள்ளார்.
- இணையதளம் மூலம் பத்திர பதிவு செய்யும் திட்டம் தமிழகத்தில் இன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
- செங்கல்பட்டில் ஊரக வளர்ச்சித்துறை சார்பில் நீர்நிலைகளை புனரமைக்கும் பணிகளை நீர்வளத்துறை அமைச்சர் திரு. ஆனந்த் இன்று தொடங்கி வைத்தார்.
- உலக பேட்மிட்டன் சாம்பியன் ஒற்றையர் முதல்சுற்றில் ஆயுஷ்ஷெட்டி, பி.வி. சிந்து உள்ளிட்டோர் இன்று களமிறங்குகின்றனர்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

சி. பி. ராதா கிருஷ்ணன்

நாட்டில் மாணாக்கர் கல்வி கற்பதற்கான மிக வலுவான கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன் பெருமிதம் வெளியிட்டுள்ளார்.

திருவாரூர் மத்திய பல்கலைக் கழகத்தில் இன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் மாணாக்கருக்கு பட்டங்களை வழங்கி உரையாற்றிய குடியரசு துணைத்தலைவர்,

மாணாக்கர் தாங்கள் கற்ற கல்வியை சமுதாயத்திற்கு வழங்குவதை என்றென்றும் கருத்தில் கொள்ள வேண்டும் என்றார்.

நாட்டில் கல்விக்கான கட்டமைப்புகள் அனைத்தும் ஒவ்வொரு சாமானியரின் வரி வருவாயிலிருந்து உருவாக்கப்பட்டது என்பதை அனைவரும் உணர வேண்டியதன் அவசியம் குறித்தும் வலியுறுத்தினார்.

❖❖❖❖❖❖❖❖

நிர்மலா சீதாராமன்

நாட்டில் பொதுத்துறை வங்கிகளுக்கான உயர்மட்ட குழு ஒன்று விரைவில் அமைக்கப்படும் என மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற பொதுத்துறை வங்கிகள் தொடர்பான 2 நாள் மாநாட்டை இன்று துவக்கிவைத்து பேசியஅவர், வங்கி சீர்த்திருத்தங்களின் அடுத்த கட்ட முன்னெடுப்புகள் குறித்து இக்குழு தீர்மானிக்கும் என்றார்.

வங்கிகளின் எதிர்கால பங்கு குறித்த பரிந்துரைகளை இக்குழு உருவாக்கும் என்றார்.

இம்மாநாட்டில் ஆக்கப்பூர்வமான விவாதங்கள் நடைபெறும் என நம்பிக்கை வெளியிட்டார்.

வாராக்கடன் அளவு மிகக்குறைவான அளவிலேயே இருப்பதால் இந்திய வங்கிகள் வலுவான நிலையில் உள்ளதாகவும்,

இதன்மூலம் இத்துறைசார்ந்த சீர்த்திருத்தங்களை மேற்கொள்ள வகை செய்யப்படுவதாகவும் எடுத்துரைத்தார்.

வளர்ச்சியடைந்த இந்தியா எனும் இலக்கை அடைவதில் வங்கியாளர்களின் இன்றியமையா பணிகள் குறித்து எடுத்துரைத்த அமைச்சர், நாட்டில் வங்கிகள் மற்றும் நிதித்துறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மற்றும் முன்னேற்றங்கள் குறித்து இம்மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்படும் என்றார்.

❖❖❖❖❖❖❖❖

அவை விதி 110

தமிழகத்தில் கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட பயிர் கடன்களுக்கு கூடுதல் தள்ளுபடி அறிவிப்பை முதலமைச்சர் திரு. விஜய் சட்டப் பேரவையில் இன்று வெளியிட்டுள்ளார்.

பேரவையில் அவை விதி 110-ன் கீழ் அறிக்கை தாக்கல் செய்து பேசியஅவர், 75 ஆயிரம் ரூபாய் வரை பயிர்கடன் பெற்ற

விவசாயிகளுக்கு கடன் முழுமையாக தள்ளுபடி செய்யப்படுவதாக எடுத்துரைத்தார்.

75 ஆயிரம் ரூபாய் முதல் ஒருலட்சம் ரூபாய் வரை பயிர்கடன் பெற்றவர்களுக்கு அதிகபட்சமாக 75 ஆயிரம் ரூபாயும்,

ஒருலட்சத்திற்கு மேல் பயிர் கடன் பெற்றவர்களுக்கு 35 ஆயிரம் ரூபாயும் தள்ளுபடி செய்யப்படும் என்றார்.

.. வாய்ஸ் ..

இதன்மூலம் அரசுக்கு 953 கோடி ரூபாய் கூடுதல் சுமை ஏற்படும் என்று கூறிய முதலமைச்சர், தற்போதுள்ள தமிழக அரசின் நிதி நெருக்கடியிலும் உழவுத் தொழிலையும், விவசாயிகளையும் மதித்தால் தான் மக்கள் மகிழ்ச்சியாக இருக்க முடியும் என்றார்.

இதன்மூலம் 13 லட்சத்து 34 ஆயிரம் விவசாயிகளுக்கு 6 ஆயிரத்து 220 கோடி ரூபாய் பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்படுவதாக முதலமைச்சர் திரு. விஜய் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖

சட்டப்பேரவை

த.வெ.க. அரசின் 100-வது நாள் நிறைவை ஒட்டி பேரவையில் முதலமைச்சருக்கு, அவைத்தலைவர் திரு. J.C.D. பிரபாகர் வாழ்த்து தெரிவித்தார்.

அப்போது 100 நாட்களில் வலிமையான அடித்தளத்தை அமைக்கும் வகையில் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் கோப்புகளில் முதலமைச்சர் கையெழுத்திட்டுள்ளதாக கூறினார்.

கோவையில் கல்லூரி மாணவர் அமுதன் மற்றும் திருவெற்றியூரில் மாணவர் தனுஷ் ஆகியோர் கொலை சம்பவம் தொடர்பாக சட்டப்பேரவையில் இன்று கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

தீர்மானத்தின் மீது எதிர்கட்சித்தலைவர் திரு. உதயநிதி,

அஇஅதிமுக உறுப்பினர் திரு. காமராஜ், திரு. எஸ்.பி. வேலுமணி,

பி.ஜே.பி. உறுப்பினர் திரு. போஜராஜன்,

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் திரு. செல்லசாமி,

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. மாரிமுத்து,

காங்கிரஸ் உறுப்பினர் திருமதி. தாரகை கட்பத்,

பா.ம.க. உறுப்பினர் திரு. கணேஷ்குமார் ஆகியோர் பேசினார்கள்.

இந்த விவாதத்தின் போது எதிர்கட்சித்தலைவர் திரு. உதயநிதிக்கும்,

அமைச்சர்கள் திரு. ஆதவ் அர்ஜுனா, திரு. நிர்மல் குமார், திரு. ராஜ்மோகன் ஆகியோருக்கிடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

விவாதத்தில் பேசிய திரு. உதயநிதி ஸ்டாலின் 100 நாள் சாதனைகளை சொல்லும் போது அண்மைக்காலத்தில் நடைபெற்ற கொலை சம்பவங்களை குறிப்பிட வேண்டிய நிலை ஏற்படுகிறது என்றார்.

கோவையில் நடைபெற்ற இச்சம்பவம், கோஷ்டி மோதல் அல்ல !

போதைப்பொருள் குறித்த தகவலை அமுதன் கொடுத்ததால் காவல்துறையினர் அந்த தகவலை கசிய விட்டதாக குறைகூறினார்.

போதைப்பொருள் நடமாட்டத்தை கட்டுப்படுத்த அரசு தவறிவிட்டது என்றும் குற்றம் சாட்டினார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திரு. மாரிமுத்து பேசியபோது, மாணவர் சமுதாயம், பாதுகாக்கப்பட வேண்டுமென்றும்,

ஓய்வுபெற்ற நீதிபதியை கொண்டு விசாரணை நடத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

இத்தீர்மானத்திற்கு பதிலளித்த மின்துறை அமைச்சர் திரு. நிர்மல் குமார், இரண்டாம் ஆண்டு படிக்கும் மாணவர்களுக்கும்,

நான்காம் ஆண்டு படிக்கும் மாணவர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதல் காரணமாக அமுதன் கொலை செய்யப்பட்டதாக தெரிவித்தார்.

முன் விரோதத்தில் மாணவர்களுக்கு இடையே ஏற்பட்ட மோதல் காரணமாக இச்சம்பவம் நேரிட்டதாகவும்,

போதைப்பொருள் தொடர்பாக கொலை செய்யப்பட்டதாக கூறப்படுவது உண்மைக்கு மாறானது என்றும், வழக்கை திசை திருப்ப வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டார்.

3 மாதத்தில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ய வேண்டுமென்று முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளதாகவும், இதுவரை இந்த வழக்கில் 15 பேர் கைது செய்யப்பட்டு உள்ளதாகவும், போதைப்பொருள் நடமாட்டத்தை கட்டுப்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டுள்ளதாக கூறினார்.

தொடர்ந்து பேசிய திரு. ஆதவ் அர்ஜுனா போதைப் பொருள் நடமாட்டத்தை அடியோடு தடுக்க அரசு உறுதிப் பூண்டுள்ளதாகவும் கூறினார்.

❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர் - பத்திர பதிவு

தமிழகத்தில் இணையதளம் மூலம் பத்திர பதிவு செய்யும் திட்டத்தை முதலமைச்சர் திரு. விஜய் சென்னை தலைமை செயலகத்தில் இன்று தொடங்கி வைத்தார்.

மனைபிரிவில் முதல் மனை மற்றும் அடுக்குமாடி குடியிருப்பில் முதல்வீடு விற்பனை ஆவணங்களுக்கு பதிவுத் துறையில் இணையவழியில் வருகையில்லா ஆவணப்பதிவு கட்டாயமாக்கல் நடைமுறை இன்று துவக்கிவைக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் ஆவணப்பதிவில் புதிய முறைகள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன.

பதிவுத்துறை இணையதளத்தில் தங்களது உள்நுழைவினை தாங்களே உருவாக்கி, ஆவணங்களை இணையவழியில் சமர்ப்பிக்கலாம்.

ஆவணத்தை எழுதி கொடுப்பவர்கள், பெறுபவர்கள் மற்றும் சாட்சிகள் ஆகிய அனைவருக்கும் ஆதார் அட்டை பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய விற்பனை ஆவணங்கள், வங்கிகளில் பெறும் கடனுக்கான அடமானம் மற்றும் ரசீது ஆவணங்கள் உள்ளிட்டவற்றை இணையதளம் வாயிலாக பதிவுசெய்து கொள்ளலாம்.

❖❖❖❖❖❖❖❖

ஆனந்த்

செங்கல்பட்டு மாவட்டத்தில் ஒன்பதரை லட்ச ரூபாய் மதிப்பீட்டில் நெடுங்குன்றம் ஊராட்சிக்கு உட்பட்ட புத்தூர் ஏரி கால்வாய் புனரமைக்கும் பணிகளை மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு. ஆனந்த் இன்று தொடங்கி வைத்தார்.

கிராம வேலை உறுதி மற்றும் வாழ்வாதார திட்டத்தின் கீழ் 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஊரக வளர்ச்சித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள வரத்து கால்வாய்கள், குளங்கள் மற்றும் ஊரணிகள் புனரமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

❖❖❖❖❖❖❖❖

நீலகிரி

நீலகிரி மாவட்டம் உதகையில் முதன்முறையாக தானியங்கி பால் விநியோக இயந்திர சேவையை ஆட்சித்தலைவர்
திருமதி. லஷ்மி பவ்யா தண்ணீரு இன்று தொடங்கிவைத்தார்.

இத்திட்டத்திற்கு பொதுமக்களின் வரவேற்பை பொறுத்து கூடுதல் இயந்திரங்களை நிறுவப்படும் என்று கூறினார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

இருவரி

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்நாள் கூட்டத்தில் ஆட்சித்தலைவர் திருமதி. சினேகா, மாற்றுத் திறனாளிகளிடமிருந்து மனுக்களை பெற்று அதன்மீது உரிய நடடிக்கை எடுக்குமாறு அலுவலர்களை அறிவுறுத்தினார்.

நாகை மாவட்டத்தில் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் தயாரிப்பு பொருட்களை சந்தைப்படுத்தும் நடவடிக்கைகளை இத்துறை சார்ந்த அலுவலர்கள் வலுப்படுத்த வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. பிரவீன்குமார் அறிவுறுத்தி உள்ளார்.

இம்மாவட்ட பேருந்து நிலையத்தில் நாகை மகளிர் சந்தையை துவக்கி வைத்து பேசியஅவர், பொதுமக்கள் அதிகமாக கூடும் இடங்களில் இத்தகைய சந்தைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை வட்டத்திற்கு உட்பட்ட கிராமங்களில் நாளைமறுநாள் நடைபெறும் உங்களை தேடி உங்கள் ஊரில் திட்ட முகாமில் பொதுமக்கள் தங்கள் கோரிக்கைகள் தொடர்பான மனுக்களை அளித்து பயன்பெறுமாறு ஆட்சித்தலைவர் திருமதி. ஷரண்யா அறி தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

மேட்டூர்

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து இன்று வினாடிக்கு 8 ஆயிரத்து 555 கனஅடியாக அதிகரித்துள்ளது.

அணையின் நீர்மட்டம் 81.85 அடியாக உள்ளது.

குடிநீர் தேவைக்காக 2 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறக்கப் படுகிறது.

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து இன்று 12 ஆயிரத்து 500 கனஅடியாக அதிகரித்துள்ளது.

சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு கருதி 2-வது நாளாக இன்றும் பரிசல் இயக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

பேட்மிட்டன்

புதுதில்லியில் நடைபெறும் உலக பேட்மிட்டன் சாம்பியன்பட்ட ஆடவர் ஒற்றையர் முதல் சுற்றில் ஆயுஷ்ஷெட்டி – சீனாவின் Yu Qi Shi யையும்

மகளிர் ஒற்றையர் முதல் சுற்றில் பி.வி. சிந்து – அயர்லாந்தின் சோபியா நோபளையும் இன்று எதிர்கொள்கின்றனர்.

❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖